**கண்டி மாவட்டம் 45 கமநலசேவை குழுக்கள்- 2023**

------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 கண்டி மாவட்டத்தின் 45 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 கண்டி மாவட்டத்தின் 45 கமநலசேவை குழுக்கள் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 45 கணக்காய்வு அறிக்கைகளில் ஒரு குழுவிற்கு பாதமான அபிப்பிராயமும் 03 குழுக்களுக்கு மறுப்பு அறிப்பிராயமும் 41 குழுக்களுக்கு முனைப்பழிப்புள்ள அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1981 ஒக்தோபர் 16 திகதிய 107 இலக்கம் கொண்ட கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரிவு 30(4) இன் படி இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு விலையின் மீது பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 17 கமநல சேவைக் குழுக்களினால் ஒடுங்குபாக முறையில் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டு கொள்கைகள் வெளியிடப்பட்டிருக்காத 42 கமநல சேவைக் குழுக்கள் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள், திணைக்களச் சுற்றறிக்கை அறிவுரைகள் மற்றும் வழங்கியுள்ள மாதிரிகளின் படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆண்டில் ஹதபிம அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ரூபா 250,112 இற்கான தெல்பிடிய கமநல சேவைக் குழுவிற்கு சொந்தமான குபோட்டா டிரக்டர் ஒன்றின் பெறுமதியும், 2015 ஆண்டில் இபுல்தெனிய கமநல சேவைக் குழுவினால் அப்புறப்படுத்தப்பட்டிருந்த டிரக்டர் ஒன்றிற்காக ஆணையாளருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 479,000 இற்கான பெறுமதியொன்றும் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு தேவையான அறிவுரைகள் வேண்டி பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 06 கமநல சேவைக் குழுக்களின் ஒப்பந்த வேலைகளுக்காக கிடைத்திருந்த 01 சதவீத தடுத்து வைத்தல் பணம் ரூபா 421,079 தொகை கணக்கீடு செய்திருக்காததுடன், 02 குழுக்களின் முன்னைய ஆண்டுகளுக்கான தடுத்து வைத்தல் பணம் ரூபா 664,758 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்புப் பதிவுகளின் லம் 2024 ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு மற்றும் குழு நிதியத்திற்கான தாக்கத்தை சரி செய்யப்படும் எனவும், ஆண்டிற்குரிய பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்படும் என பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது என. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 09 கமநல சேவைக் குழுக்களின் நிர்மாண வேலை அலகுகள் கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள், சேதனப் பசளை தூளாக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம் ஆகிய 123 சொத்து விடயங்களின் பெறுமதியை இனங்கண்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | மாவட்ட அலுவலகத்தை வினவி பெறுமதிகளை பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கமநல வங்கிகளின் கணக்கீட்டு | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மென்பொருள் கொள்வனவு செய்வதற்காக ஒன்று ரூபா 17,131 வீதம் 29 கமநல சேவைக் குழுக்களுக்கு ரூபா 496,799 தொகை மற்றும் ஒன்று ரூபா 62,100 தொகை வீதம் அச்சு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக 24 கமநல சேவைக் குழுக்களுக்காக ரூபா 1,490,400 தொகை என கூட்டுத்தொகை ரூபா 1,987,199 இற்கான தொகை கமநல அபிவிருத்தி மாவட்ட பிரதி ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அந்த உபகரணங்கள் குழுக்களுக்கு கிடைத்திருக்காததுடன், அந்தக் கொடுப்பனவு முற்பணம் ஒன்றென கணக்கீடு செய்யாமல் செலவு ஒன்றென மற்றும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு மேற்கொண்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (உ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 24 கமநல சேவைக் குழுக்களினால் செலுத்தப்பட வேண்டியிருந்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 1,316,408 தொகை எனினும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் அதற்காக ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | விடயங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு மற்றும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகளை சரி செய்வதற்கு மற்றும் நிலுவை கணக்காய்வுக் கட்டணங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கமநல வங்கிக்காக ஒரு Scanner இயந்திரமும் 02 Dot Matrix Printer கொள்வனவு செய்வதற்கும் மீளாய்வாண்டின் போது ஒரு கமநல சேவை நிலையத்திலிருந்து ரூபா 223,336 தொகை வீதம் 38 கமநல சேவை நிலையங்களினால் ரூபா 8,486,768 இற்கான தொகையொன்று கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் அந்த இயந்திரங்கள் குழுக்களுக்கு கிடைத்திருக்காத | தற்போது ஒரு உபகரணம் கிடைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய இரண்டு உபரணங்களும் கணக்கீடு செய்யும் முறை தொடர்பாக மாவட்ட அலுவலத்தின் அறிவுரை வேண்டப்பட்டுள்ளது என. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2023 ஏப்ரல் 24 திகதி 01/2023 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரிவு 2.1.1 இற்கு இணங்க ஒவ்வொரு கமநல வங்கிகள் (முன்னோடி) செயற்திட்டத்தின் வருடாந்த இறுதிக் கணக்கறிக்கையின் படி நிகர தேறிய இலாபத்தின் 10 சதவீதம் கடன் ஆபத்திற்காக விவசாய இடர் கடன் அணவல் கணக்கிற்கு ஒதுக்குதல் வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 08 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு ஒதுக்கங்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 முதல் நிகரத் தேறிய இலாபத்தின் 10 சதவீதம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஏ) | 28 கமநல வங்கிகளின் மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,975,859 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்குகள் சரி செய்யப்படும் என. | காலப் பகுதிக்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 18 கமநல சேவை குழுக்களில் வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு விடயங்கள் அடங்கிய 57 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் துணை அறிக்கைகளுடன் இணக்கஞ் செய்த போது கூட்டுத்தொகை ரூபா 6,562,953 இற்கான வித்தியாசம் ஒன்றும் 02 கமநல சேவைக் குழுக்களின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் இறுதி மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளிடையே ரூபா 621,571 இற்கான வித்தியாசம் ஒன்றும் காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 11 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பல வருட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 54,980,773 இற்கான வரவு மீதியொன்றும் மற்றும் ரூபா 765,194 இற்கான செலவு மீதியொன்றும் தீர்த்திருக்கவில்லை. | வித்தியாசத்தை இனங்கண்டு தீர்க்கப்படும் என | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து%ல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 37 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 39,366,692 இற்கான 343 சொத்து விடயங்களினதும் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 20,837,627 இற்கான 318 பொறுப்பு விடயங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், பதிவேடுகள் மற்றும் கோப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | முன்னரிருந்து கணக்கறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகள் காணப்படுவதுடன், நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஏனைய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு எதிர் காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்கள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப் பிரமாணம் 880 மற்றும் 1981 ஒக்தோபர் 16 திகதி 107 இலக்கங் கொண்ட கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் பந்தி 06 | 29 கமநல சேவைக் குழுக்களின் நிறைவேற்றுச் செயலாளர், கமநல வங்கி எழுதுனர் மற்றும் கமநல ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் உரிய சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 891 | 12 கமநல சேவைக் குழுக்களினால் ஊழியர் பிணைப் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பிணைப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 08/2009 இலக்கம் கொண்ட மற்றும் 2009 ஜூன் 17 திகதி 09/2009 (1) இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | 33 கமநல சேவைக் குழுக்களின் உத்தியோகத்தர்கள் அலுவலத்திற்கு உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்வதற்காக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தியிருக்கவில்லை. | செயற்படாத நிலையில் காணப்படும் விரல் அடையாள இயந்திரத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக பிரதி ஆணையாளரின் அறிவுரை வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், செயற்படு நிலையில் காணப்படும் விரல் அடையாள இயந்திரங்களின் %லம் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலுக்கான பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |
| **(இ)** | **கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 1986 ஒக்தோபர் 21 திகதிய 264 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 01 | குறிப்பிட்ட ஆண்டினுள் அறை வாடகைகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 11 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 672,480 இற்கான அறை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கான அறை வாடகை 2024 ஆண்டில் அறவீடு செய்யப்பட்டதெனவும், பழைய மீதிகளை பதிவழிப்பதற்கு பிரதி ஆணையாளரிடம் அறிவுரை வேண்டப்பட்டுள்ளது எனவும். | சுற்றறிக்கை அறிவுரையின் படி நடவடிக்கை எடுத்து அறை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | 2016 பெப்ரவரி 09 திகதிய 03/2016 இலக்கம் கொண்ட சுற்றிக்கை | 09 கமநல சேவைக் குழுக்களின் அதிகாரப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 264 விவசாய அமைப்புக்களில் 192 கமநல அமைப்புக்கள் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளரினால் மற்றும் 237 விவசாய அமைப்புக்கள் நிறைவேற்று உத்தியோகத்தரினால் | எதிர் காலத்தில் பரிசோதனைகள் மாதிரிக்கு இணங்க கமநல அமைப்புக்களை பரிசோதனை செய்யப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (iii) | 1988 மே 27 திகதிய 322 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | 07 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 177,675 இற்கான காணி உரிமை பங்கு தொகை தொடர்பாக சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் கிடைத்த பின்னர் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய முறையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 3.4 | 15 கமநல சேவைக் குழுக்களினால் கூறுவிலை அழைக்கப்படாமல் ரூபா 14,766,729 தொகை பெறுமதியான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அவசர கொள்வனவுகளுக்காக குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனவும், அறிவுரை வழங்கப்பட்டுள்ளவாறு எதிர் காலத்தில் கூறுவிலைகள் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 38 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 12,646,056 இற்கான தேறிய மிகையொன்றும், 07 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 859,856 இற்கான பற்றாக்குறையும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 12,534,437 தொகை மற்றும் ரூபா 827,559 தொகை காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் படி 45 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,822,601 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,522,278 தொகை காணப்பட்டது.

### 2.2 நிதி விளைவுகளின் பகுப்பாய்வு

45 குழுக்களில் 26 குழுக்கள் தொடர்பாக நிதி விளைவுகளில் ரூபா 7,618,361 இற்கான முன்னேற்றம் ஒன்றும் 19 குழுக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,541,041 இற்கான பின்னடைவொன்றும் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு நிதி மற்றும் ஏனைய செலவுகள் குறைவடைதல், ஏக்கர் வரி வருமானங்கள், ஏனைய வருமானம் மற்றும் கட்டணங்கள் பெறுவனவு அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது. நிதி விளைவுகளின் பின்னடைவுக்கு ஒப்பந்த வேலை பங்களிப்பு வருமானம் குறைவடைதல், நிலையங்களின் பராமரிப்பு மற்றும் நிருவாகச் செலவுகள் அதிகரித்தல், வாடகை வருமானங்கள், விவசாய உபகரண விற்பனை வருமானங்கள், விவசாய அமைப்புக்களின் நன்கொடைகள் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 32 கமநல சேவைக் குழுக்கள் அவை அமைந்துள்ள காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளை உரித்தாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், எதிர் காலத்தில் உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் எனவும். | காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 21 திகதிய 7/5/3/விமுகே இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் 04(vi) இன் படி விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 426,985 தொகையினை இது வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மத்திய கண்டி மற்றும் கம்பொல ஆகிய 02 கமநல சேவை நிலையங்களின் 03 விற்பனை நிலையங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான உடன்படிக்கை ஒன்று அல்லது எழுத்து%ல ஆவணமொன்று கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை உடன்படிக்கை கையொப்பமிட்டு அதன்படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 13 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டு இறுதி இருப்பில் காணப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 265,170 தொகைக்கான இருப்புக்களும், கூட்டுப்பெறுமதி ரூபா 33,112 தொகை கன்று இருப்புக்களும், கூட்டுப்பெறுமதி ரூபா 239,199 தொகைக்கான விவசாய இரசாயன இருப்பும், கூட்டுப்பெறுமதி ரூபா 91,387 தொகைக்கான உர இருப்பும் மற்றும் கூட்டுப்பெறுமதி ரூபா 8,811 தொகையும் காலவதியாகி காணப்பட்டதுடன், இந்த இருப்புக்கள் தொடர்பாக 2006 திசெம்பர் 08 திகதிய 2006/08 | இருப்புக்களை, ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்காக குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் படி முறைப் பிரகாரம் ஏடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 35 கமநல சேவை நிலையங்களின் 796 பிரிவுகளுக்குரிய வயற் காணிகளின் எண்ணிக்கை 28854 ஏக்கர்களாக காணப்பட்டதுடன், அவற்றில் 2023 சிறு போகத்தில் பயிர் செய்யப்படாத வயற் காணிகளின் எண்ணிக்கை 17,196 ஏக்கர் தொகையும் 2023/2024 பெரும் போகத்தில் பயிர் செய்யப்படாத காணிகளின் எண்ணிக்கை 14,615 ஏக்கர்களும் காணப்பட்டது. | அனைத்துக் காணிகளிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மரக்கறிகள் மற்றும் போகப் பயிர்செய்கை பயிர் செய்யப்பட்டிருந்தன என. | விவசாயக் காணிகளின் உச்சமட்ட பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 31 கமநல சேவை நிலையங்களில் 2023 ஆண்டு இறுதியளவில் தரிசு வயற் காணிகளின் எண்ணிக்கை 1581 ஏக்கர்களாக காணப்பட்டது. | பயிர் செய்யப்படாத விவசாயக் காணிகள் பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பயிர் செய்யப்படாத வயற் காணிகள் தொடர்பாக சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 18 கமநல சேவைக் குழுக்களின் 2018 திசெம்பர் 31 திகதிய 07/05/12/கிவ/தாகோ இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுத்து நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 12,728,252 இற்கான 190 சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 10,160,288 தொகையிற்கான 180 பொறுப்பு விடயங்களை தீர்த்திருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான தகவல்கள் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | முகாமைத்துவ அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஆகஸ்ட் 21 திகதிய SMFI/3/D/08/08 இலக்கம் கொண்ட விவசாய அமைச்சுச் செயலாளரின் சுற்று நிருபத்தின் படி உர மானியம் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய விவசாயிகளின் பெயர்கள் உரிய தகவல்களுடன் agrarian.lk இணைய | விவசாயிகளினால் வழங்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கு இலக்கங்கள் சரியானவையாக காணப்படாமையால் சில விவசாயிகளுக்கு மானியம் கிடைத்திருக்கவில்லை எனவும், | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி குறிப்பிட்ட காலப் பகுதியில் மானியத் தொகைகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| தளத்திற்கு உள்ளீடு செய்யப்பட வேண்டியதுடன், அதன்படி, 11 கமநல சேவைக் குழுக்களினால் 2023/24 பெரும்போக நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்டிருந்த விவசாயிகள் 10,964 பேரின் தகவல்கள் இணைய தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 9,084 விவசாயிகளுக்கு மானியத் தொகை கிடைத்திருந்ததுடன், அதன்படி, பெறும் போகத்திற்கான மானியம் கிடைக்க வேண்டிய 1875 விவசாயிகளுக்கு மேலும் மானியத் தொகைகள் கிடைத்திருக்கவில்லை. | மீண்டும் சரி செய்யப்பட்ட வங்கிக் கணக்கு விபரங்கள் மாவட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. |

## 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 குழுக்களில் 1996 இல் கமநல சேவைத் திணைக்களத்தினால் கிடைத்திருந்த சூடு மிதிக்கும் இயந்திரம் ஒன்றும் டிரக்டர் வண்டி ஒன்று மற்றும் 02 சகதிச் சக்கரம் மற்றும் ரூபா 172,600 தொகை பெறுமதியான சிசிடிவீ கமரா முறைமையொன்று மற்றும் ரூபா 380,000 தொகைக்கான 02 சேதனை தூளாக்கும் இயந்திரங்கள் மற்றும் 05 குழுக்களில் அரச வீடொன்று, விற்பனை நிலையமொன்று, 03 நாட்டு மேடை குடில்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | சிசிடிவீ கமரா முறைமை திருத்த வேலைக்காக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், ஏனைய சொத்துக்கள் எதிர் காலத்தில் ஆக்கப+ர்வமாக பயன்படுத்தப்படும் எனவும். | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவைக் குழுக்களின் 1995 முதல் 2020 வரையான காலப் பகுதியில் நிதி முறைகேடுகள் தொடர்பாக குழுக்களுக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,736,509 இற்கான தொகையொன்று பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை முடிவுசெய்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | மீதிகளை அறவீடு செய்வதற்கான தகவல்கள் மாவட்ட அலுவல்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 44 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 6,784 விவசாயிகளுக்கு வழங்கியிருந்த கடன் தொகையில் கூட்டுத்தொகை ரூபா 188,083,364 இற்கான நிலுவை கடன் மீதியொன்றும் ரூபா 20,022,147 இற்கான நிலுவை கடன் வட்டியும் 06 மாதங்களுக்கும் 24 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கால தாமதமாகியிருந்த போதிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | தற்போது இந்த கடன் தொகையை அறவீடு செய்வதற்காக தீர்ப்பு சபைக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு குறிப்பிட்ட கோப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்தப் பணம் அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 36 கமநல சேவைக் குழுக்களின் 214 வைப்புக் கணக்குகளின் தனிப்பட்ட மீதிகளின் அட்டவணை சமர்ப்பித்திருக்காமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சில மீதிகளின் அட்டவணைகள் சமப்படாமை காரணமாக கூட்டுத்தொகை ரூபா 327,931,837 இற்கான தனிப்பட்ட மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | எதிர் காலத்தில் தனிப்பட்ட மீதி அட்டவணைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வைப்புக்களுக்குரிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரிவு 07 மற்றும் 2021 யூலை 15 திகதிய 7/12/4/5 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் திருத்திய கடிதத்தின் பிரகாரம் கமநல வங்கியினால் ஆண்டிற்கான இலாபத்திலிருந்து பங்கிலாபம் ஒதுக்கப்பட வேண்டும் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 17 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு ஒதுக்கம் மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2024 கணக்கீடு தயாரிக்கும் போது பங்குலாபம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2020 யூன் 24 திகதிய 09/2020 – 04/2012 (திருத்தம் i) கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் | எதிர் காலத்தில் செயற்திட்டக் கடன்காரர்களுக்காக முதலீட்டு கணக்குகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அலுவல்களின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.8.6 பந்தியின் படி செயற்திட்ட கடனுக்காக முதலீட்டுக்-கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 15 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு முதலீட்டு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2023 ஏப்ரல் 24 திகதிய 01/2023 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரிவுகள் 2.1.2 மற்றும் 2.2.2 படி விவசாயிகளுக்கு கடன் வழங்கும் சந்தர்ப்பத்தில் விவசாய இடர் அனவல் கணக்கொன்றிற்கு விவசாய வங்கி (முன்னோடி) செயற்திட்டத்தின் பங்களிப்பு என குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 18 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2014 யூலை 09 திகதிய 05/2014 இலக்கம் கொண்ட கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் படி பெரமக சிறுவர் வைப்புக் கணக்கில் வைப்பு மீதிகள் வயது 18 வருடங்களை மிகைத்துள்ள கணக்கு உரிமையாளர்களுக்கு பொதுவான சேமிப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும் 05 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பொதுவான சேமிப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |
| (எ) | 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.4.11(i) பந்திக்கு இணங்க இடர் கடன் அணவல் கணக்கில் சேகரமாகும் பணம் அரச வங்கியொன்றில் கூடிய வட்டி பெறக்கூடிய சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்ய | சேமிப்புக் கணக்கொன்று திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு தனியாக சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பித்திருக்காத 03 கமநல சேவைக் குழுக்கள் காணப்பட்டது. | | |
| (ஏ) | வாவின்ன மற்றும் உல்பதகம கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,708,667 இற்கான தொங்கல் கணக்கு மீதிகள் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு கணக்கு மீதிகள் சரி செய்ய வேண்டும். |
| (ஐ) | 06 கமநல வங்கிகளில் மீளாய்வாண்டிற்கான ரூபா 753,020 தொகை மிகையாகவும் 12 கமநல வங்கிகளின் வட்டி வருமானம் ரூபா 2,463,756 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் சரி செய்யப்படும் என. | காலப் பகுதிக்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | திகன கமநல சேவைக் குழுவில் பல வருட காலமாக காணப்படுகின்ற கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி ரூபா 1,218,487 தொகைக்கான அறவிட வேண்டிய 03 மீதிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்த்திருக்கவில்லை. | தற்போது பாதுகாப்பு உத்தியோகத்தரின் பெயரிடும் படி எழுத்து%லம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | காரணங்களை இனங்கண்டு மீதிகளை தீர்க்க வேண்டும். |